


02. 11. 2025

தலைப்புச்செய்திகள்

- வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் ஒருங்கிணைந்த பங்களிப்பின் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.
- நாட்டின் முதல் கனரக தொலைத்தொடர்பு செயற்கைகோள் CMS-03 ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து இன்றுமாலை விண்ணில் செலுத்தப்படுகிறது.
- தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் தொடர்பாக முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் தலைமையில் சென்னையில் இன்று அனைத்துக்கட்சி கூட்டம் நடைபெற்றது.
- தமிழகத்தில் டெங்கு பாதிப்பு குறித்து மக்கள் அச்சப்பட தேவையில்லை என மாநில அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.
- ஹோபார்டில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான மூன்றாவது, 20-20 கிரிக்கெட் போட்டியில் டாஸ்வென்ற இந்தியா முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

ஹரித்துவார் பதஞ்சலி பல்கலைக்கழகத்தின் 2 –வது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், 2047-ல் இந்த இலக்கை அடைய ஆண்கள் மற்றும் பெண்கள் சம அளவில் பங்களிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

கல்விபெறும் மகளிரால் நாடு பெருமை கொள்வதாக அவர் தெரிவித்தார்.

3 நாள் பயணமாக உத்தரகாண்ட் சென்றுள்ள குடியரசு தலைவர், அம்மாநில சட்டப்பேரவையில் நாளை உரையாற்றுகிறார்.

தொடர்ந்து நைனிடாலில் ஆளுநர் மாளிகை நிறுவப்பட்டதன் 125-வது ஆண்டு விழாவிலும் அவர் பங்கேற்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப புத்தாக மாநாடு 2025-ஐ பிரதமர் திரு. நரேந்திரமோடி புதுதில்லியில் நாளை தொடங்கிவைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் நாட்டின் ஆராய்ச்சி மேம்பாட்டிற்கான ஒருலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்தையும் பிரதமர் அறிமுகப் படுத்துகிறார்.

3 நாள் நடைபெறும் இம்மாநாட்டில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் தொழில்துறை நிறுவனங்களை சார்ந்த 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்கின்றனர்.

ஆராய்ச்சியாளர்களுக்கு இடையே ஒருங்கிணைப்பு, இளம் படைப்பாளர்களுடன் நாட்டின் அறிவியல் தொழில்நுட்ப கட்டமைப்பை வலுப்படுத்துவது உள்ளிட்ட அமர்வுகள் இதில் இடம்பெறும்.

❖❖❖❖❖❖❖❖❖❖

செயற்கைகோள்

நாட்டின் முதல் கனரக தொலைத்தொடர்பு செயற்கைகோள் CMS-03 ஸ்ரீஹரிகோட்டா சதீஸ்தவான் விண்வெளி மையத்திலிருந்து LVM3-M5 ராக்கெட் மூலம் இன்றுமாலை மணி 5.26-க்கு விண்ணில்

செலுத்துவதற்கான கவுண்டவுன் தற்போது சுமூகமாக நடைபெற்று வருகிறது.

4 ஆயிரம் கிலோ எடை கொண்ட இந்த செயற்கைகோள் கடற்படை மற்றும் ராணுவ தகவல் தொடர்பை மேலும் வலுப்படுத்தும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல்

பீஹார் முதல்கட்ட சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் நாளை மறுநாளுடன் முடிவடையும் நிலையில், அரசியல் கட்சி தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பி.ஜே.பி. மூத்த தலைவரும், பிரதமருமான திரு.நரேந்திரமோடி, ஆரா மற்றும் நவாடா தொகுதிகளில் தேர்தல் பேரணியில் பங்கேற்று தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக இன்று வாக்குகளை சேகரிக்கிறார்.

காங்கிரஸ் கட்சியின் திரு. ராகுல்காந்தி, பெகுசராய் மற்றும் ககாரியாவில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகிறார்.

தர்பங்கா, முசாபர்பூர், கோபால் கனி, போஜ்பூர் உள்ளிட்ட 18 மாவட்டங்களின் 121 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு வரும் 6-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

243 சட்டப்பேரவை தொகுதிகளை கொண்டு பீஹார் மாநிலத்தில் எஞ்சிய 122 தொகுதிகளுக்கு 2-ம் கட்டமாக இம்மாதம் 11-ம் தேதி தேர்தல் நடைபெறுகிறது.

இரு கட்டங்களாக பதிவாகும் வாக்குகள் வரும் 14-ம் தேதி எண்ணப்படுகின்றன.

❖❖❖❖❖❖❖❖❖❖

கடல்சார் கருத்தரங்கு

கடல்சார் தகவல் பரிமாற்ற கருத்தரங்கு 2025 குருகிராமில் நாளை தொடங்குகிறது.

கடல்சார் எதிர்காலத்திற்கான பாதுகாப்பு மற்றும் மீட்சியுடன் கூடிய ஒத்துழைப்பை உறுதிசெய்யும் இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துரைக்கும் வகையில் இந்த 3 நாள் மாநாடு நடைபெறுகிறது.

இந்திய பெருங்கடல் பகுதியில் 30 நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தி பன்முனை தொழில்நுட்ப பொருளாதார ஒத்துழைப்பை அதிகரிப்பது தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகளும் இதில் இடம்பெறும்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஷேக்கான் நினைவு மாரத்தான்

முப்படையினரின் நலனுக்கான ஷேக்கான் நினைவு மாரத்தான் ஓட்டம் சென்னை தாம்பரம் மற்றும் ஆவடியில் உள்ள இந்திய விமானப்படை நிலையங்களில் இன்று நடைபெற்றது.

விமானப்படையின் 93-வது ஆண்டுவிழா கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக ஓடுவீர், உயர்வீர், உத்வேகம் பெறுவீர் என்ற கருப்பொருளுடன் 5, 10 மற்றும் 21 கிலோ மீட்டர் என 3 பிரிவுளில் இந்த மாரத்தான் ஓட்டம் நடைபெற்றது.

உடல் தகுதி, ஒற்றுமை, தேசம் குறித்த பெருமையை ஊக்குவிப்பதை நோக்கமாக கொண்டு நடைபெற்ற இந்த மாரத்தான் நிகழ்ச்சியில் விமானப்படை வீரர்கள், அவர்தம் குடும்பத்தினர் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

தஞ்சை மற்றும் சூலூர் விமானப்படை நிலையங்களிலும் இந்த மாரத்தான் நிகழ்ச்சி நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖❖❖❖

பஹ்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல்லா டிஃப் பின் ரஷீத் 2 நாள் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர். எஸ். ஜெய்சங்கரை சந்தித்து இருதரப்பு உறவுகள் அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் உள்ளிட்டவை குறித்து ஆலோசனை மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தேர்தல் ஆணையம் நடுநிலைமையுடன், சுதந்திரமாக செயல்பட வேண்டுமென்று கோரும் தீர்மானம் முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் விரைவில் தொடங்கும் என தேர்தல் ஆணையம் அறிவித்த நிலையில் இதுகுறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

தமிழகத்தில் சட்டப் பேரவை தேர்தலுக்கு சில மாதங்களே எஞ்சியுள்ளதாலும், பருவமழை தீவிரமடையும் என எதிர்பார்க்கப் படுவதாலும் இப்பணிகளை மேற்கொள்வதில் உள்ள நடைமுறை சிக்கல்கள் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖

மா.சுப்ரமணியன்

தமிழகத்தில் டெங்கு பாதிப்பு குறித்து மக்கள் அச்சப்பட தேவையில்லை என மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல்லில் 3 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பிலான ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனை கட்டடத்தை இன்று திறந்து வைத்து பேசியஅவர், வடகிழக்கு பருவமழை காலங்களில் காய்ச்சல் பாதிப்பு குறைப்பு மற்றும் சிகிச்சைக்கான அனைத்து முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

கடந்த 11 மாதங்களில் 18 ஆயிரத்திற்கும் அதிகமானோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நிலையில் உரிய சிகிச்சை வழங்கப்பட்டதன் மூலம் முழுமையாக குணமடைந்ததாக எடுத்துரைத்தார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

மூர்த்தி

மதுரை மாவட்டம் பெரியகுளம் கண்மாயை சீரமைக்கும் பணிகளை மாநில வணிகவரித்துறை அமைச்சர் திரு.மூர்த்தி இன்று தொடங்கிவைத்தார்.

7 கோடியே 73 லட்சரூபாய் மதிப்பில் கண்மாயை தூர்வாரும் பணிகள், மின் விளக்குகள், சுற்றுச்சுவர் உள்ளிட்ட பல்வேறு பணிகள் நடைபெறவுள்ளன.

❖❖❖❖❖❖❖❖❖❖

வைகை அணை

தேனி மாவட்டம் வைகை அணையிலிருந்து சிவகங்கை மாவட்ட பாசன பகுதிகளுக்கு இன்றுமுதல் வரும் 6-ம் தேதி வரை வினாடிக்கு 772 கனஅடி தண்ணீர் திறக்கப்படவுள்ளது.

இதனையடுத்து அணையிலிருந்து வினாடிக்கு 2 ஆயிரம் கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுவதால், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மாவட்ட கரையோர பகுதி மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு நீர்வளத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

உலக ஆன்மாக்கள் தினம்

உலக ஆன்மாக்கள் தினம் கிறிஸ்தவர்களால் இன்று கடைப்பிடிக்கப் படுகிறது.

மறைந்த முன்னோர்களின் கல்லறைகளில் மெழுகுவர்த்தி ஏற்றியும், மலர்களை வைத்தும், கிறிஸ்தவர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்நாளையொட்டி நாகை வேளாங்கன்னி, தூத்துக்குடி பனிமயமாதா, திருச்சி மேலப்புதூர் புனித மரியன்னை உள்ளிட்ட பல்வேறு தேவாலயங்களில் சிறப்பு திருப்பலிகள் நடைபெறுகின்றன.

தென்காசி மாவட்டம் செங்கோட்டை, புலியங்குடி உள்ளிட்ட பகுதிகளில் கிறிஸ்தவர்கள் கல்லறை தோட்டங்களில் தங்களது

முன்னோர்களுக்கு அஞ்சலி செலுத்தி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

திருப்பத்தூர் மாவட்டத்தில் 18 வயதிற்குட்பட்ட மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நாளை தொடங்கி வரும் 13-ம் தேதிவரை நடைபெறவுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி. சிவசௌந்தரவள்ளி தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் பி.ஜே.பி. இளைஞரணி சார்பில் ஒற்றுமை மாரத்தான் மற்றும் போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு ஓட்டம் இன்று நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖❖❖❖

20-20 கிரிக்கெட்

ஹோபர்டில் இந்தியாவிற்கு எதிரான 3-வது 20-20 கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட்செய்யும் ஆஸ்திரேலியா சற்றுமுன் 2 ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 10 ரன் எடுத்திருந்தது.

முன்னதாக டாஸ் வென்ற இந்தியா பந்து வீச தீர்மானித்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖

மகளிர் கிரிக்கெட்

ஐ.சி.சி உலக கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று -தென்னாப்பிரிக்காவை நவி மும்பையில் எதிர்கொள்கிறது.

இரு அணிகளும் முதல்முறையாக கோப்பையை வெல்லும் முனைப்புடன் களமிறங்கவுள்ளதால் இப்போட்டி கிரிக்கெட் ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்பை ஏற்படுத்தியுள்ளது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖